தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஹூட்ஹூட் புயலால் கர்நாடகத்தில் மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்**

வங்காளவிரிகுடாவில் உருவான ஹூட் ஹூட் புயல், நேற்று ஆந்திரமாநிலம் விசாகபட்டணத்தில் கரையை கடந்ததையடுத்து கர்நாடகத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர கர்நாடகம் மற்றும் தென்பகுதி கர்நாடகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் பெங்களூருவில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மட்டும் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று கூறப்பட்டுள்ளது.

**குன்னூரில் பரவலாக மழை**

குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை பரவலாக மழை பெய்தது. குன்னூரில் கொலக்கம்பை, மஞ்சூர், மஞ்சக்கம்பை, பெட்டட்டி போன்ற பகுதிகளில் சில மணிநேரம் மழை பரவலாகப் பெய்தது. அணைப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர் மட்டம் கணிசமான அளவு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திண்டுக்கல் பகுதிகளில் மழை**

திண்டுக்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை 1 மணி நேரம் பெய்த மழையினால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை

சரிவர பெய்யாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து பல பகுதிகளில் குடிநீர் பஞ்சம் ஏற்படும் நிலை உருவானது. இந்நிலையில் திண்டுக்கல் பகுதியில் கடந்த ஒருவார காலமாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இதில் ஞாயிற்றுக்கிழமை இடியுடன் கூடிய மழை பெய்தது. சுமார் 1மணி நேரம் பெய்த மழையினால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பருவமழை தொடங்குவதற்கு முன்பே, மழை பெய்வதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நிலக்கடலையில் வண்டுகளை கட்டுப்படுத்த வழிமுறை

நிலக்கடலை சாகுபடியில் விஷ வண்டுகளை கட்டுப்படுத்தும் விஷ உணவு தயாரித்தல் பயிற்சி அண்மையில் நடைபெற்றது. விருத்தாசலம் அடுத்த புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல மாணவர்கள் சார்பில், நிலக்கடலை சாகுபடியில் சிவப்பு கம்பளிப் புழு மற்றும் புரட்டீனியா புழுவை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான விஷ உணவு தயாரித்தல் குறித்த செய்முறைப் பயிற்சி 2 நாள்கள் நடைபெற்றது. பயிற்சி நிறைவுநாள் நிகழ்ச்சியில் ஊராட்சித் தலைவர் ராமதாஸ் தலைமை ஏற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல மாணவர்கள் குழுத் தலைவர் ஏ.சத்தியமூர்த்தி உள்பட 20 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் அணை: நீர் வரத்து அதிகரிப்பு

சேலம்: மேட்டூர் அணைக்கு, வினாடிக்கு 15881 கனஅடி வீதம் தண்ணீர் வரத்து இருந்தது. இந்நிலையில் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை

காரணமாக, வினாடிக்கு 21290 கனஅடி என நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர் மட்டம், இன்று காலை நிலவரப்படி 88.58 அடியாகவும், இருப்பு 51.04 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

## <u>சாகுபடி குறித்து பயிற்சி</u>

திருத்தணி : தோட்டக்கலை துறையினர் மூலம், விவசாயிகளுக்கு, நகர்ப்புற காய்கறி சாகுபடி குறித்து, ஒருநாள் பயிற்சி நடந்தது.திருத்தணி மற்றும் ஆர்.கே.பேட்டை வட்டார குழுக்களில் அமைக்கப்பட்ட, 143 விவசாயிகளுக்கு, தோட்டக்கலை துறையின் மூலம், நகர்ப்புற காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ், காய்கறி சாகுபடி குறித்து ஒருநாள் பயிற்சி திருத்தணியில் நடந்தது.திருத்தணி தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஜெயலட்சுமி தலைமை வகித்தார். இதில், மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் நவநீதகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, உற்பத்தி இரு மடங்கு, வருமானம் மூன்று மடங்கு எடுப்பதற்கான தொழில்நுட்ப உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார்.தொடர்ந்து, விதை தொழில்நுட்பத்தில் இருந்து, அறுவடை தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்துதல் வரை நவீன தொழில்நுட்பங்களை குறித்து தோட்டக்கலை துறை உதவி இயக்குனர், அரவிந்தன் விளக்கி கூறினார்.

## <u>உருளைக்கிழங்கு விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி</u>

மேட்டுப்பாளையம்,: முதல் சீசன் அறுவடை முடியும் தருவாயிலும், உருளைக்கிழங்கு நல்ல விலைக்கு விற்பனை ஆவதால், நீலகிரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தொடர் மழை:கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் நீலகிரி கூட்டுறவு உருளைக்கிழங்கு விற்பனை சங்கமும், 75க்கும் மேற்பட்ட தனியார் உருளைக்கிழங்கு மண்டிகளும் உள்ளன.நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்குகளை, இங்கு கொண்டு வந்து தரம் பிரித்து, 45 கிலோ மூட்டையாக பிடித்து, ஏலம் மூலம்

விற்பனை செய்யப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்தில், கடந்த ஜூலை மாதம், உருளைக்கிழங்கு முதல் சீசன் துவங்கியது. மழை தொடர்ச்சியாக பெய்ததால், வயலில் தண்ணீர் நின்றால், கிழங்கு அழுகி விடும் என எண்ணி, விவசாயிகள் அதிகளவில் அறுவடை செய்து, மண்டிகளுக்கு விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதுகுறித்து, நீலகிரி கூட்டுறவு உருளைக்கிழங்கு விற்பனை சங்க அதிகாரிகள் கூறியதாவது:உருளைக்கிழங்கு முதல் சீசன் அறுவடை ஜூலை மாதம் துவங்கியது. சங்கத்திற்கு தினமும் சராசரியாக, 200 டன் கிழங்கு விற்பனைக்கு வந்தது. இம்மாத மூன்றாவது வாரத்தில், முதல் சீசன் முடிய உள்ள நிலையிலும், தினமும், 75லிருந்து 100 டன் கிழங்கு விற்பனைக்கு வருகிறது.45 கிலோ மூட்டை, குறைந்த பட்சம் ரூ.1,200க்கும், அதிகபட்சம், ரூ.1,500க்கும் விற்பனை ஆகிறது. நல்ல விலை கிடைப்பதால், நீலகிரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஏற்றுமதி வாய்ப்புஉருளைக்கிழங்கு இரண்டாவது அறுவடை சீசன், நவம்பர் மாதம் முதல் வாரத்தில் இருந்து துவங்கும். கிழங்கின் தரம் சிறப்பாக இருந்தால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு, அதிகாரிகள் கூறினர்.

## முட்டை விலை 292 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 292 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 302 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 10 காசுகள் குறைந்து, 292 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 337, பெங்களூரு, 325, மைசூர், 318, ஐதராபாத், 310, மும்பை,

350, விஜயவாடா, 302, கோல்கட்டா, 355, பர்வாலா, 305, டில்லி, 343.இவ்வாறு, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 59 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 78 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

**<u>புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் பயனாளிகள் தேர்வு செய்ய முடிவு</u>**

மேட்டூர்: புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில், ஒவ்வொரு ஒன்றியத்திலும் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, நாட்டுக்கோழி குஞ்சுகள் வழங்க, கால்நடைத்துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தின் பல மாவட்டங்களில், கால்நடைத்துறை சார்பில், புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு, நாட்டுக் கோழி குஞ்சுகள் வழங்கப்படுகிறது. சேலம், நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில், கோழிப்பண்ணைகள் அதிகளவில் உள்ளது. அதற்கேற்ப, கோழிகள் உற்பத்தி அதிகமாக இருப்பதால், சேலம் மாவட்டத்தில், புறக்கோழி வளர்ப்பு திட்டம் நடைமுறைக்கு வரவில்லை. கிராமங்களில், விவசாயிகள் பெரும்பாலானோர், வீடுகளில் நாட்டுக் கோழிகள் வளர்ப்பது வழக்கம். சமீபகாலமாக, சேலம் மாவட்டத்தில், கிராமப்புறங்களில் நாட்டுக் கோழி வளர்ப்பு குறைந்து விட்டது. இதனால், நாட்டுக்கோழிகள் உற்பத்தி குறைந்து விட்டதால், தற்போது புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தை, சேலம் மாவட்டத்திலும் நடைமுறைபடுத்த, கால்நடைத்துறை முடிவு செய்துள்ளது. திட்டத்தின் கீழ், ஒரு பயனாளிக்கு, 45 எண்ணிக்கை கொண்ட ஒரு யூனிட் கோழிக் குஞ்சுகள், கால்நடைத்துறை சார்பில் இலவசமாக வழங்கப்படும். சேலம் மாவட்டத்தில், 20 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும், குறைந்தபட்சம், மூன்று பயனாளிகளை தேர்வு

செய்து, தலா ஒரு யூனிட் கோழிக்குஞ்சுகள் வழங்க கால்நடைத்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும், கால்நடைத்துறை அதிகாரிகள் மூலம், பயனாளிகள் தேர்வு, விரைவில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.31 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூரில் நடந்த ஏலத்தில், 900 மூட்டை மஞ்சள், 31.25 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த மஞ்சள் ஏலத்துக்கு கடலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, நைனார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த, 100 விவசாயிகள் விளைவித்த, 900 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 5,109 ரூபாய், அதிகபட்சம் 6, 869 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 4, 009 ரூபாய், அதிகபட்சம் 6, 309 ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், ஒன்பது வியாபாரிகள் கலந்து கொண்டு, 900 மூட்டை மஞ்சளை, 31 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## அதிக மகசூல் தரக்கூடிய மரவள்ளி பயிரிட விவசாயிகளுக்கு அறிவுரை

பனமரத்துப்பட்டி: பருவ நிலை மாற்றம், மழை குறைவு ஆகியற்றை எதிர்கொண்டு, அதிக மகசூல் தரக்கூடிய, ஏத்தாப்பூர்-1 ரக மரவள்ளி பயிர் செய்து, விவசாயிகள் பயன்பெற, வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. ஏத்தாப்பூர், மரவள்ளி ஆராய்ச்சி நிலைய தலைவர் மாணிக்கம் கூறியதாவது: தருமபுரி மாவட்டத்தில் 25 சதவீதம், நாமக்கல் மாவட்டத்தில் 18 சதவீதம், சேலம் மாவட்டத்தில் 16 சதவீதம் மரவள்ளி சாகுடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தை சுற்றியுள்ள, 800 சேகோ ஆலையில், ஸ்டார்ச் மாவு,

ஜவ்வரிசி, சேமியா, சிப்ஸ், வற்றல் தயாரிப்பு தொழில் நடக்கிறது. இந்தாண்டு, 75 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மரவள்ளி, 750 முதல் 850 ரூபாய் வரை விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அடுத்தாண்டு, மரவள்ளிக்கு நல்ல விலை கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பருவநிலை மாற்றம், மழை குறைவினை எதிர்கொண்டு, அதிக மகசூல் தரக்கூடிய, தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம் வெளியிட்டுள்ள ஏத்தாப்பூர்-1 ரக மரவள்ளி பயிரிட்டு, பயன்பெறலாம். ஏத்தாப்பூர்-1 ரக விதை கரணை தேவைப்படும் விவசாயிகள், 04282-293526 எண்ணில் தொடர்புகொண்டு, பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**<u>வீட்டுக்கே விதை பரிசோதனை முடிவு அனுப்பப்படும்: வேளாண் அதிகாரி தகவல்</u>**

தர்மபுரி; விதை பரிசோதனை மேற்கொள்ள மாதிரிக்கு, 30 ரூபாய் வீதம் பயிர் ரகம், குவியல் எண் ஆகிய விவரங்களை குறிப்பிட்டு, முகப்பு கடிதத்துடன், "மாவட்ட விதை பரிசோதனை அலுவலருக்கு அனுப்பி வைத்தால்,' வீட்டுக்கே விதை பரிசோதனை முடிவுகள் அனுப்பப்படும் என, வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். மாவட்ட விதை பரிசோதனை நிலைய அலுவலர் கமலா வெளியிட்ட அறிக்கை:

"விதையின் கவனம், அறுவடையில் மகிழ்ச்சி' என்பதற்கு ஏற்ப, விதைக்கும் முன் விதைத்தரம் அறிந்து விதைப்பு மேற்கொள்ள வேண்டும். நல்ல விதைக்கென்று சில குணாதிசயங்கள் உள்ளன. நல்ல விதையில், அதிக முளைப்புத்திறன், அதிக புறத்தூய்மை, அளவான ஈரப்பதம், பிற ரக கலப்பு இல்லாமல் இருத்தல், பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் இருத்தல் ஆகிய சிறப்பியல்பு இருக்க வேண்டும். விதை தரத்தில் ஏற்படும் பிரச்னைகளையும் அதற்கு உண்டான காரணங்களையும் அறிய முயும். மேலும், விதைகளை,

காய வைக்கவும், சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அறிந்து கொள்ள உதவுகிறது. விதை தரத்துக்கு உட்பட்டு சான்றளிப்பதற்கு ஏற்றதா அல்லது உண்மை நிலை தரத்துக்கு ஏற்றதா என்பதை கண்டறிய, விதை பரிசோதனை உதவுகிறது. எனவே, விதை விற்பனையாளர்களும், விவசாயிகளும் இப்பருவத்தில் விதைப்பதற்கு வைத்துள்ள விதையின் தரம் அறிந்து விற்பனை அல்லது விதைப்பு செய்தால் நல்ல மகசூல் பெறலாம். விதை பரிசோதனை மேற்கொள்ள மாதிரிக்கு, 30 ரூபாய் வீதம் பயிர் ரகம், குவியல் எண் ஆகிய விவரங்களை குறிப்பிட்டு, முகப்பு கடிதத்துடன், "மாவட்ட விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், கலெக்டர் அலுவலகம், தர்மபுரி,' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பி வைத்தால், விதை பரிசோதனை முடிவுகள் வீட்டின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

## <u>கும்ப்பபூ சாகுபடி தொடங்கியது</u>

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கன்னிப்பூ, கும்பப்பூ என இரண்டுபோக சாகுபடிகள் செய்யப்பட்டு வருகிறது. கன்னிப்பூ சாகுபடி அறுவடை முடிந்து கும்பப்பூ சாகுபடி பணி தொடங்கி உள்ளது. இதையடுத்து சுசீந்திரம், தேரூர், வடக்கு தாமரைகுளம், பூதப்பாண்டி மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விவசாயிகள் வயல்களில் உழவு பணியை தொடங்கி உள்ளனர். வயல் நடவு பணிக்காக நாற்று பாவப்பட்டு உள்ளது. பாசன குளங்களிலும், அணைகளிலும் நீர்மட்டம் அதிகமாக உள்ளதால் விவசாயிகள் உற்சாகமாக சாகுபடி பணியில் தீவிரம் காட்டி உள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகள் புதுயுக்தி களை தாக்குதலை கட்டுப்படுத்தி மகசூல் பெற நிழற்போர்வை

அரூர்,: தர்மபுரி மாவட்டத்தில் உணவு பயிர்களில் களை தாக்குதலை கட்டுபடுத்தி அதிக மகசூல் பெற நிழற்போர்வையை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.தர்மபுரி மாவட்டத்தில் அரூர், மொரப்பூர், பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி, கடத் தூர், புட்டிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் பரவலாக நெல், மஞ்சள், கரும்பு, மரவ ள்ளி உள்ளிட்ட பயிர்கள் பயிர் செய்தாலும், உடன் தக்காளி, பருத்தி, பருப்பு வகைகள், காய்கறிகள், பழ செடிகள், மலர் சாகுபடியும் நடைபெற்று வருகிறது. ஆண் டிற்கு ஆண்டு மழை யளவு குறைந்துள்ளதை அடுத்து விவசாயிகளிடையே சொ ட்டு நீர் பாசனம் அதிக அள வில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனாலும், விவ சாய பணிகளுக்கு ஆட்கள் கிடை ப்பது அரிதாக உள் ளது. எனவே பல புதுமை களை விவசாயத்தில் விவசாயிகள் புகுத்தி வருகின்றனர்.இதன்படி, பயிர்களில் களைகளை கட்டுபடுத்தவும், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தி மகசூல் அதிகம் பெறவும் தற்போது விவசாயிகள் பிளாஸ்டிக் போர்வைகளை பயன்படுத்தி வருகின்றனர். இது குறித்து விவசாயி இளஞ்செழியன் கூறுகையில், தண்ணீர் பற்றாக்குறை மற்றும் இதர பிரச்னைகளுக்காக தற்போது அரூர் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் இது போன்ற பிளாஸ்டிக் போர்வைகளை பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதனை அமைக்க ஒரு ஏக்கருக்குரூ10ஆயிரம் முதல்ரூ12ஆயிரம் வரை செலவாகிறது. ஒரு முறை அமைத்தால் தொ டர்ந்து 4 முறை பயன்படுத்த முடியும், வேளாண்மை மருந்து கம்பெனிகளே இதனை தயாரித்து விற்பனை

செய்கின்றனர்.இந்த முறையில் விவசாயம் செய்வதால் களைக ளை கட்டுபடுத்துவதுடன் பூச்சி தாக்குதலும் குறைவாக உள்ளது. சொட்டு நீர் பாசன முறை என்பதால் தண்ணீர் குறைவாக செலவாவதுடன் ஆள் கூலியும் குறைகிறது. நல்ல தரத்துடன் மகசூலும் அதிகம் கிடைப்பதால் இப் பகுதி விவசாயிகள் தற்போது இந்த முறைக்கு மாறி வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையால் பயிர் சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு

கோவை, : கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை அதிகரிப்பால் பயிர் சாகுபடி பரப்பளவும் அதிகரித்துள்ளது. இதனால் காய்கறி விலை குறைய வாய்ப்புள்ளதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.கோவை மாவட்டத்தில் 1 லட்சத்து 76 ஆயிரம் எக்டேர் பரப்பளவு நிலத்தில் விவசாயம் செய்யப்படுகிறது. இதில், 90 ஆயிரம் எக்டேரில் நெல், கரும்பு உள்ளிட்ட வேளாண்மை பயிர்களும், 40 ஆயிரம் எக்டேரில் முருங்கை, மா உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களும் பயிரிடப்படுகிறது. மீதமுள்ள எக்டேர் நிலங்களில் தென்னை விவசாயம் செய்யப்படுகிறது. கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களாக பெய்த தென்மேற்கு பருவமழை காரணமாக நிலத்தடி நீர் மட்டம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. இதன்காரணமாக விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் விதைப்பு துவக்கியுள்ளனர்.

இதுபற்றி கோவை மாவட்ட வேளாண்துறை அதிகாரி கூறுகையில், ''கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சரிவிகித அளவில் பெய்துள்ளதால் அணைகளிலும் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதன்காரணமாக, பல இடங்கில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதையொட்டி, கோவை மாவட்டத்தில் 1,255 எக்டேர் பரப்பளவில் நெற்பயிர், 14,500 எக்டேர் பரப்பளவில் சோளம், 100 எக்டேர்

பரப்பளவில் கம்பு, 1,260 எக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் ஆகியவை பயிரிடப்பட்டுள்ளது. இதேபோல், பயிறு வகைகளையும் விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டுள்ளனர். சுமார் 3,000 எக்டேர் பரப்பளவிற்கு பயிறு வகைகள் பயிரிட்டுள்ளனர். தவிர, நிலக்கடலை 3,600 எக்டேர் அளவிற்கும், எள் 280 எக்டேர் அளவிற்கும் பயிரிட்டுள்ளனர்.கடந்த சில மாதங்களாக நிலத்தடி நீர் பற்றாக்குறையால் காய்கறி வரத்து பெருமளவு குறைந்திருந்தது. இந்நிலையில், தற்போது பெய்த மழை காரணமாக விவசாயிகள் அதிகளவில் காய்கறிகளையும் பயிரிட்டு வருகின்றனர். இதில், சின்ன வெங்காயம் 1,000 எக்டேர் பரப்பளவில் பயிரிட்டுள்ளனர். மேலும், தக்காளி, வெண்டை, பாகற்காய், சுரைக்காய், அவரை உள்ளிட்ட பல வகையான காய்கறிகள் 2,000 எக்டேர் அளவில் பயிரிட்டுள்ளனர். தற்போது, தென்மேற்கு பருவமழையையொட்டி அதிகளவில் காய்கறி, தானியம் பயிரிடப்பட்டுள்ளதால் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும் வரும் ஜனவரி மாதத்தில் அறுவடைக்கு தயாராகிவிடும். எனவே, இனி கோவை மாவட்டத்தில் காய்கறி மற்றும் தானியங்களின் விலை குறைய அதிக வாய்ப்புள்ளது' என்றார்.

## நெல் மகசூல் அதிகரிக்க நுண்ணுரம் இட வேளாண்துறை அறிவுறுத்தல்

சிவகங்கை, : நெற்பயிரில் மகசூல் அதிகரிக்க நுண்ணுரம் இட வேளாண்துறை விவசாயிகளை அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து சிவகங்கை வேளாண் உதவி இயக்குநர் தனபால் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது: நெல் பயிருக்கு பேரூட்டங்களான தழை, மணி, சாம்பல் சத்துடன் நுண்ணூட்டங்களான இரும்பு, துத்தநாகம், மாங்கனீசு, தாமிரம் போன் நுண்ணூட்டங்களும் இன்றியமையாததாகும். நெல் பயிரிடும் போது பேரூட்டச்சத்து உரங்களை மட்டுமே இடுவதால் நுண்ணூட்டச்சத்துக்கள் குறைந்து பயிரில் மகசூல் குறைகிறது. நுண்ணூட்டச்சத்து கிடைப்பதால் பயிருக்கு நோய் எதிர்ப்பு சக்தி, பேரூட்டச்சத்துக்களை உள்வாங்கும்

தன்மை, அதிக சிம்புகள் வெடித்து தூர் கட்டுவது, அதிக மணி உற்பத்தியாகி மகசூல் அதிகரிப்பது உள்ளிட்ட நன்மைகள் ஏற்படுகிறது. நெல் நுண்ணூட்டம் மற்றும் சிங்க் சல்பேட் உரங்கள் வட்டார வேளாண் அலுவலகத்தில் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. இதை ஏக்கருக்கு 10கிலோ வீதம் அடியுரமாக இட வேண்டும். மேலும் விவசாய இடுபொருட்களும் மானியத்தில் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு கூடுதல் மகசூல் பெற்று பயனடைய வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>வாழையில் வாடல் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்</u>**

திருப்புவனம் : திருப்புவனம் வட்டாரத்தில் வாழையில் வாடல்நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தோடட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கல்யாணசுந்தரம் கூறும் போது திருப்புவனம் வட்டாரத்தில் திருப்பாச்சேத்தி, கானுர், மாரநாடு, மணலூர், கலியாந்தூர் ஆகிய பகுதிகளில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த தரமான கன்றுகள் தேர்வு செய்ய வேண்டும், நடவு செய்யும் முன் களிமண் குழம்பு தயார் செய்து அதில் வாழை கிழங்கு பகுதியில் பூசி 40கிராம் கார்போ பியூரான் மருந்தினை தூவி நடவு செய்தால் வாடல் நோய் தாக்காது, வாழை கிழங்கு பகுதியை எமிசான் கரைசலில் சிறிது நேரம் ஊற வைத்து நடவு செய்யலாம். இதில் ஏதாவது ஒரு முறையை பின்பற்றினால் வாழையில் நோய் தாக்குதல் இராது. வாடல் நோய் பாதிக்கப்பட்ட கன்றுகளை உடனடியாக அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் நீர் சுண்ணாம்பு கரைசலை ஊற்றினால் நோய் அடுத்த வாழைக்கு பராவது என தெரிவித்துள்ளார்.

## தொடர்மழையால் நீர்வரத்து அதிகரிப்பு கிருஷ்ணகிரி அணை ஓரிரு நாளில் நிரம்பும்

கிருஷ்ணகிரி, : கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், ஓரிரு நாளில் அணை நிரம்ப வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.கர்நாடக மாநிலத்தில் தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால், ஓசூர் அருகே கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணை முழு கொள்ளளவை எட்டியதையடுத்து அணையின் பாதுகாப்பு கருதி நேற்று முன்தினம் காலை நிலவரப்படி வினாடிக்கு 1600 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. இதே போல், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் கடந்த 5 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஓசூர் தொரப்பள்ளி, அக்ரஹாரம், பார்த்தகோட்டா, முத்தாலி, சின்னகொள்ளு, பெரிய கொள்ளு, ராமாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது.இந்த தண்ணீர் நேற்று கிருஷ்ணகிரி அணைக்கு வந்தடைந்தது. இதையடுத்து, அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 2,100 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதனால், அணையின் நீர் மட்டம் 44 அடியாக உயர்ந்தது. இதே நிலை நீடித்தால், இன்னும் ஓரிரு தினங்களில் அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவான 52 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புதுகையில் மாலையில் கொட்டித் தீர்த்த மழை

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் நேற்று மாலையில் கொட்டி தீர்த்த மழையினால் சாலைகளில் நீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது.

புதுக்கோட்டையில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது வானம் மேகமூட்டத்துடன் சூழ்ந்து மிதமான மழை பெய்து வந்தது. இந்நிலையில் நேற்று புதுக்கோட்டையில் மாலை 3 மணிக்கு பயங்கர காற்று, இடி மின்னலுடன் மழை பெய்ய துவங்கியது. தொடர்ந்து மாலை 6 மணி வரை 3 மணி நேரம் விடாமல் கொட்டி தீர்த்த மழையினால் புதுக் கோட்டை நகர் முழுவதும் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கி போக்குவரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியது. மேலும் சாலை களில் சென்றோர் குடை களை பிடித்தும், பிளாஸ்டிக் டப்பாக்கள் மற்றும் பிளாஸ்டிக் பைகளை மாட்டிக்கொண்டும் சென்றனர். தொடர்ந்து மின்தடை ஏற்பட்டது. இந்த மழையினால் குளிர்ந்த வானிலை நிலவியதாலும், குளங்களில் மழைநீர் தேங்கும் அளவில் கொட்டி தீர்த்த மழையினாலும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## <u>சம்பா நெல் நடவுக்கு அடியுரம் இட வேண்டும் வேளாண் அதிகாரி அறிவுறுத்தல்</u>

அன்னவாசல், : சம்பா பருவத்தில் நடவு செய்யப்படும் நெல் பயிருக்கு அடியுரம் அவசியம் இட வேண்டும் என குடுமியான்மலை, மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை பயிற்சி நிலைய இயக்குநர்(பொ) வெள்ளைச்சாமி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தற்போது சம்பா பருவத்தில் நெல் நடவு செய்யும் பணி ஆரம்பமாகியுள்ளது. எனவே நடவு வயலுக்கு நாற்று நடுவதற்கு முன்பாக அடியுரம் இடுவது அவசியம். ஒரு ஏக்கருக்கு 5 டன் நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். இல்லையெனில் 2.5 டன் பசுந்தாள் உரம் இட வேண்டும் ரசாயன உரங்களை மண் பரிசோதனைப் பகுப்பாய்வு முடிவுப்படி இட வேண்டும். மண் பரிசோதனை செய்யாத வயல்களில் பொதுப் பரிந்துரையின்படி உரம் இட வேண்டும். அதாவது ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 15 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து, 5

கிலோ சாம்பல் சத்து தரக்கூடிய யூரியா 33 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோ, பியூரியேட் ஆப் பொட்டாஷ் 8 கிலோ ஆகியவற்றை கடைசி உழவுக்கு முன்பாக இட வேண்டும். சூப்பர் பாஸ்பேட் கிடைக்கவில்லை யெனில், ஒரு ஏக்கருக்கு டி.ஏ.பி 44 கிலோ, யூரியா 27 கிலோ, பியூரியேட் ஆப் பொட்டாஷ் 8 கிலோ என்ற அளவில் இடலாம். மேலும் உயிர் உரமான அசோஸ்பைரில்லம் 4 பொட்டலம், பாஸ்போ பேக்டீரியா 4 கொட்டலம் ஆகியவற்றை 10 கிலோ தொழு உரம் மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன் சீராக இடவும். அத்துடன் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ சூடாமோனாஸ் ப்ளோரசன்ஸ் உயிரி பூஞ்சான மருந்தினை 20 கிலோ தொழுஉரம் 20 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன்பாக இட வேண்டும். மேலும் நெல் நுண்ணுட்ட உரம் ஏக்கருக்கு 5 கிலோவினை 20 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன் அல்லது நடவுக்குப் பின் மேலாக சீராகத் தூவ வேண்டும். நுண்ணுட்டக் கலவையினை அடி உரமாக இடக் கூடாது.இவ்வாறு செய்வதால் நெற்பயிரில் கூடுதல் சிம்புக்கள் உண்டாவதுடன் அதிக மகசூல் கிடைப்பதற்கும் அதனால் கூடுதல் லாபம் பெற்றும் பயனடையலாம் என விவசாயிகளை குடுமியான்மலை, மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை பயிற்சி நிலைய இயக்குநர்(பொ) வெள்ளைச்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>கம்பம் பகுதிகளில் தென்னை விவசாய பரப்பை அதிகப்படுத்த வேண்டும் வேளாண் அதிகாரிகளுக்கு வேண்டுகோள்</u>**

கம்பம், : கம்பம் பகுதி யில் வாடல் நோய் தாக்கியதால் பல நூறு ஏக்கர் பரப்பில் உள்ள தென்னை விவசாயம் சுருங்கி விட்டது. இந்த பரப்பை அதிகப்படுத்த வேளாண்மைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கம்பம், கூடலூர், லோயர்கேம்ப், ஆங்கூர்பாளையம், சாமாண்டிபுரம், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி,

கருநாக்கமுத்தன்பட்டி உள்ளிட்ட ஊர்களில் கடந்த 15 ஆண்டுக ளுக்கு முன்பு தென்னை விவசாயம் அதிகளவு இருந்தது. காலி நிலங்களை வாங்கி தென்னையை நட்டு அதனை பராமரிக்க ஆட்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். கடந்த 10 ஆண் டுக்கு முன்பு தென்னை விவசாயத்தை வாடல் நோய், கூன் வண்டு தாக் குதல் நோய் கடுமையாக தாக்கியது. இதனால் தென்னை விவசாயம் பாதிக்கு மேல் குறைந்துவிட்டது. கேரளா வில் இருந்து பரவிய வாடல் நோயை கட்டுப்படுத்த வேளாண்மைத்துறை நடவடிக்கையே எடுக்காமல் கைவிட்டதால் இன்று தென்னை விவசாய பரப்பு பெருமளவில் குறைந்து விட்டது. தற்போது விவசாயிகள் தென்னை பயிரிட்ட இடங்களில் வாழை, திராட்சை போன்றவைகளை பயிரிட்டு வருகின்றனர். சிலர் கடன் தொல்லையால் ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களுக்கு தென்னை தோட்டங்களை விற்று விட்டனர். தென்னந்தோப்புகள் எல்லாம் தற்போது வீட்டடி மனைகளாக மாறிவிட்டன. இதனால் தேங்காய் விலை உச்சத்தை எட்டி உள்ளது. எனவே மீண்டும் தென்னை விவசாயத்திற்கு புத்துயிர் ஊட்ட தேவை யான திட்டங்களை வேளாண்மைத்துறை அதிகாரிகள் உருவாக்க வேண் டும். தென்னை பரப்பை அதிகரிக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து தென்னை விவசாயிகள் கூறுகையில், ‘அதிக ஏக்கர் பரப்பில் விளைந்த தென்னை இன்று அழிக்கப்பட்டு வருகிறது. தோட்டங்கள் எல்லாம் பிளாட்களாகவும், பயனற்ற நிலையிலும் உள்ளன. இனிவரும் காலங்களிலாவது அதிக ஏக்கர் பரப்பில் தென்னை விவசாயத்தை செய்வதற்கு வேளாண் அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்க வேண்டும்’ என்றனர்.

## பயறு விதை நடுவது எப்படி விவசாயிகளுக்கு பயிற்சி

திருச்சுழி, : தமிழ்நாடு அரசு வேளா ண்மைத்துறை யின் மூலம் ம.ரெட்டிய பட்டி பகுதியிலுள்ள கத்தாளம்பட்டி கிராமத்தில் விதை கிராமத்திட்ட த்தின் கீழ் விவசாயிகள் எவ் வாறு பயிரிடுவது என்பது குறித்து பயி ற்சி நடத்தப்பட்

டது. ம. ரெ ட்டியபட்டி வே ளாண்மை உதவி இயக்குநர் நாச்சியார் அம்மாள் வரவேற்புரையாற்றினார். வேளாண்மைத் துறை இயக்குநர் பூவலிங் கம் பயிற்சியை துவக்கி வைத்து மானாவாரி பயிரில் சாகுபடி பற்றிய விளக்கம் அளித்தார். கோவிலாங்குளம் வே ளாண்மை அறிவியல் நிலை ய உதவி பேராசிரியர் தீபா கரன் மானாவாரி மண்வளம் பயறு சாகுபடி, பயிர் பாது காப்பு முதலிய தொழில்நுட்பங்களை விளக்கிக்கூறினார். விருதுநகர் உழவர் பயிற்சி நிலைய அலுவலர் சுந்தரவள்ளி பயறு வகை உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் விதை சான்று துறை விவசாயிகளுக்கு செய்யும் சேவை விதைசான்று பெறும் நடைமுறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். ஊராட்சி மன்ற தலை வர் பெருமாள் பயிற்சியின் பயன்கள் பற்றி விளக்கம் அளித்தார். உதவி வேளாண் மை அலுவலர்கள் ஜெயபாண்டியன், கலைவாணன், ராமராஜ் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் ராமன் ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகள் செய்தனர். வேளாண்மை அலுவலர் மூர்த்தி நன்றி கூறினார். பயிற்சியில் 100 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## இஞ்சி கிலோ ரூ40 ஆக குறைந்தது

நாகர்கோவில், : நாகர்கோவிலில் கிலோ ரூ.100க்கு விற்ற இஞ்சி ரூ40 ஆக குறைந்தது. நாகர்கோவிலில் கடந்த மாதம் காய்கறிகள் வரத்து அதிகம் காரணமாக விலை குறைந்திருந்தது. இந்நிலையில் மழை பெய்ததால் காய்கறிகள் விலை மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது. நாகர்கோவில் அப்டா மார்க்கெட்டில் நேற்றைய காய்கறி விலை விபரம்: நாட்டு தக்காளி - ரூ12, ஆப்பிள் தக்காளி ரூ15, நாட்டு கத்தரிக்காய் ரூ32, வரிக்கத்தரிக்காய் ரூ25, உருளைக்கிழங்கு ரூ32 - ரூ38, பல்லாரி ரூ18 -ரூ28, சின்ன வெங்காயமரூ32 - ரூ38, சம்பா மிளகாய் ரூ22, மிளகாய் உருட்டு ரூ32,கேரட் ரூ20 - ரூ50, பீன்ஸ் ரூ40-ரூ42, பீட்ரூட் ரூ18, வெள்ளரிக்காய் ரூ25,

தடியங்காய் ரூ10, பூசனிக்காய் ரூ8, கறிவேப்பிலை ரூ15 - ரூ20,மல்லித்தளை ரூ55, புதினா ரூ45, மாங்காய் ரூ55 - ரூ60,பாகற்காய் ரூ25, வெண்டைக்காய் ரூ24, சீனியவரை ரூ22, வழுதலங்காய்ரூ25, இஞ்சி ரூ40, சேனை ரூ24, தேங்காய் ரூ28, முருங்கைக்காய் ரூ30, காலிபிளவர் ரூ30 - ரூ35. தொடர்ந்து மழை பெய்தால் காய்கறிகள் விலை சற்று உயர வாய்ப்புள்ளதாக விற்பனையாளர் குருதனபால் கூறினார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் வேளாண் புல மாணவர்கள்**

கடலூர், : சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள், பேராசிரியர் காளிராஜன் தலைமையில் கடலூர் அருகே ராமாபுரம் சமத்துவபுரம் கிராமத்தில் வேளாண் பயிற்சி முகாம் அமைத்துள்ளனர். கிராம விவசாயிகளுக்கு கரும்பு, வாழை, மரவள்ளி சாகுபடி குறித்து செயல்விளக்கம் அளித்து வருகின்றனர். அதோடு எவ்வாறு மண் மாதிரிகளை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் மண்ணின் தன்மைக்கேற்ப உரமிடுதல் பற்றியும் விவசாயிகளுக்கு மாணவர்கள் செயல்விளக்கத்துடன் பயிற்சி அளித்தனர்.

**பெரம்பலூரில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி ஒரு மணி நேரம் பெய்தது**

பெரம்பலூர்,: பெரம்பலூரில் 1 மணிநேரம் பருவமழை நேற்று மாலை பெய் தது. பெரம்பலூர் மாவட்டத்தின் ஆண்டுசராசரி மழையளவு 908மி.மீ. ஆகும். இதில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் குளிர்கால மழையாக 28மிமீ மழையும், மார்ச், ஏப்ரல், மே ஆகிய 3 மாதங்களில் கோடைகால மழையாக 91மி.மீ மழையும், ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர்ஆகிய 4மாதங்களில் தென்மேற்கு பருவமழையாக 314மிமீ மழை யும், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3மாதங்களில் வடகிழக்குப் பருவ மழையாக 475மி.மீ. மழையும் என சேர்த்து 12 மாதங்களில் 908மிமீ மழைபெய்கிறது.இதில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பெய்யக்கூடிய தென் மேற்கு பருவமழை நடப்பாண்டு 280.70மி.மீ மட்டுமே பெய்தது. இது

தென்மேற்குப் பருவமழையின் ஆண்டு சராசரியைக் காட்டிலும் 33.30மி.மீ குறைவாகும். இந்நிலையில் அக்டோபரில் தொடங்கும் வடகிழக்கு பருவமழை 5வதுமுறையாக நேற்றுமாலை 4.30 மணிமுதல் 5.30மணிவரை பெய்துள்ளது. ஏற்கனவே அக்1ம்தேதி 50மி.மீ மழையும், 7ம்தேதி இரவு 153மி.மீ மழையும் பெய்துள்ளது. 9,10 தேதிகளில் பரவலாகப் பெய்தது. இதனைத் தொடர்ந்து நேற்று ஒரு மணிநேரத்திற்கு நல்லமழை பெய்தது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

## <u>நெற்பயிரில் விதை மூலம் பரவும் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறை</u>

சேதுபாவாசத்திரம், : நெற்பயிரில் விதை மூலம் பரவும் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் கடந்த ஒரு வார மாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் நாற்றுவிடும் நடவுப்பணி, நேரடி நெல் விதை ப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். செப்டம்பர் மாதத்தில் சிஆர்1009 போன்ற நீண்டகால ரக நெல் விதைகளை நாற்றுவிட்டவர்கள் தற்போது நடவு செய்வதற்கு நிலம் தயார் செய்வதும் நடவு செய்வதுமாக இருக்கின்றனர். நாற்றுகளை நடவு செய்வதற்கு முன்பாக உயிர் உரக்கரைசலில் 15 நிமிடம் வைத்திருந்து நடவு செய்ய வேண்டும். நாற்றங்காலிலோ அல்லது நடவு வயலிலோ சிறு பாத்தி அமைத்து நீர் நிறுத்தி நெற்பயிர்க்கென பிரத்யேகமாக உற்பத்தி செய்யப்பட்ட அசோஸ்பயிரில்லம் 200 கிராம் (1 பாக்கெட்) அத்துடன் பாஸ்போபாக்டீரியா 200 கிராமை சேர்த்து கலக்கி கலவையாக தயார் செய்ய வேண்டும். சூடோமோனாஸ் புளூரோசென்ஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியத்தையும் 1 கிலோ என்ற அளவில் சேர்த்து கொள்ளலாம். இதன்மூலம் நோய்களை கட்டுப்படுத்தலாம். நாற்றங்காலில்

இருந்து பறித்த நாற்றுகளை அதன் வேர்ப்பகுதி முழுவதுமாக 15 நிமிடம் உயிர் உரக்கரைசலில் மூழ்கி இருக்குமாறு செய்து வயலில் நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் விரைவில் வேர் பிடித்து மண்ணில் உள்ள சத்துக்களை எளிதில் உறிஞ்சி பயிர் துரிதமாக வளர்ச்சி பெறும். மேலும் வயல் வரப்புகளில் பயறு வகை பயிர்களாகிய உளுந்து, பச்சை பயறு அல்லது துவரை விதைகளை போது மான இடைவெளி விட்டு விதைப்பு செய்தால் கூடுதல் வருமானம் பெறலாம். தற்போது நாற்றுவிடும் விவசாயிகள் ஏ.டி.டி39, ஏ.டி.டி46, பி.பி.டி5204, ஜெ.ஜி.எல்1798 போன்ற நெல் ரகங்களை சாகுபடி செய்யலாம். சான்று பெற்ற நெல் விதைகளை மட்டுமே வாங்கி நாற்றுவிட வேண் டும். பயிரின் வளர்ச்சி காலங்களில் வரக்கூடிய நோய்கள் பெரும்பாலும் விதை மூலம் பரவக்கூடிய நோய்களாகும். இந்த நோய்களை கட்டுப்படுத்துவதற்கு அதிக செலவாகும். அதோடு மட்டுமல்லாது நோயை கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய ரசாயன மருந்துகளின் நச்சுப்பயிர் மூலமாகவும் காற்று மற்றும் தண்ணீர் மூலமாகவும் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதோடு மனித இனம், கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும். இதை தவிர்ப்பதற்கு உயிரியல் காரணிகளை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்ய 1 கிலோ விதைக்கு 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் எடுத்து 10 கிராம் சூடோமோனாஸ் புளோரோசன்ஸ் என்ற எதிர் உயிர் பாக்டீரியத்தை கலந்து 10 மணி நேரம் ஊற வைத்திருந்து வடிகட்ட வேண்டும். ஊற வைத்த விதையை தண்ணீரில் நனைந்த கோணிப்பையில் கட்டி 24 மணி நேரம் இருட்டில் வைத்து முளை கட்டி பின்னர் விதைக்கலாம் அல்லது நிழலில் உலர்த்திய பின்னர் விதைக்கலாம். இத்துடன் 200 கிராம் நெல்லுக்குரிய அசோஸ் பயிரில்லம், 200 கிராம் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களையும் போதுமான அளவு தண்ணீரில் கலந்து ஒரு இரவு முழுவதும் ஊற வைத்திருந்து விதைக்கலாம். திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தில் 1

ஏக்கர் நடவு செய்வதற்கு ஒரு சென்ட் நிலத்தில் 2 கிலோ விதையளவு பயன்படுத்தி நாற்றுவிட்டால் போதுமானது.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>சித்தரேவு பகுதியில் கண்மாய்கள் நிரம்புகின்றன விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்து வரும் தொடர் மழை எதிரொலியாக, சித்தரேவு பகுதியில் உள்ள கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மலைப்பகுதியில் மழை

திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் ஆடலூர், பன்றிமலை, மஞ்சள் பரப்பு, புல்லாவெளி உள்ளிட்ட மலைக்கிராமங்கள் அமைந்துள்ளன. இந்த பகுதியில் பெய்யும் மழைநீர் மலையடிவாரத்தில் உள்ள குடகனாறு, கூழையாறு என 2 வாய்க்கால்கள் வழியாக வழிந்தோடுகிறது. இதில் கூழையாற்று தண்ணீர் திண்டுக்கல் மாநகருக்கு குடிநீர் ஆதாரமாக திகழும் ஆத்தூர் காமராஜர் அணைக்கு செல்கிறது. மற்றொரு வாய்க்கால் வழியாக வரும் தண்ணீர் சித்தரேவு பகுதியில் உள்ள சொட்டாங்குளம், புளியங்குளம், தாமரைக்குளம், ஏந்தல் குளம், அத்திக்குளம் உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட கண்மாய்களுக்கு சென்றடையும். சமீபத்தில் பெய்த மழை காரணமாக இந்த வாய்க்காலில் தண்ணீர் வரத்து ஏற்பட்டு கண்மாய்கள் நிரம்ப தொடங்கின. இதனிடையே மர்ம நபர்கள் சிலர், இந்த கண்மாய்களுக்கு செல்லும் கால்வாய் சிமெண்டு தடுப்புசுவரை உடைத்து

ஆத்தூர் அணைப்பகுதிக்கு தண்ணீரை திருப்பி விட்டனர். இதனால் கண்மாய்களுக்கு நீர்வரத்து தடைப்பட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கால்வாயில் உடைக்கப்பட்ட சிமெண்டு தடுப்பு சுவர் பகுதியில் மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து தண்ணீரை கண்மாய்களுக்கு திருப்பி விட்டனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

இதையடுத்து கண்மாய்களுக்கு மீண்டும் நீர்வரத்து ஏற்பட தொடங்கியது. இதனிடையே இந்த பிரச்சினை தொடர்பாக திண்டுக்கல் ஆர்.டி.ஓ. உத்தமன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. இதில் திண்டுக்கல் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு மேலும் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க முடிவு எடுக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது சித்தரேவு பகுதியில் உள்ள கண்மாய்களுக்கு நீர்வரத்து காணப்படுவதால், கடந்த ஒரு ஆண்டுக்கு பிறகு மீண்டும் கண்மாய்கள் நிரம்ப தொடங்கி உள்ளன. கண்மாய்களில் தண்ணீர் நிரம்பி வருவதால், இந்த பகுதியில் உள்ள விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் விடுமுறை தினமான நேற்று தண்ணீர் நிரம்பி உள்ள கண்மாய்களில் சிறுவர்கள் ஆனந்த குளியல் போட்டனர்.

## குமரி மாவட்டத்தில் மழை: 4 ஆண்டுகளுக்குப் பிறகு முக்கடல் அணை நிரம்பியது அதிகபட்சமாக 92 மி.மீ. மழை பதிவு

குமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழையினால் முக்கடல் அணை 4 ஆண்டுகளுக்குப்பிறகு நிரம்பியுள்ளது. அதிகபட்சமாக அந்த அணைப்பகுதியில் 92 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தொடரும் மழை குமரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகலில் நாகர்கோவில் நகரம் உள்பட மாவட்டத்தின் ஒரு பகுதியில் பலத்த மழை பெய்தது. அதேநேரத்தில் மாவட்டத்தின் மற்றொரு பகுதியில் வெயிலும், மழை பெய்வதற்கான அறிகுறியும் மட்டுமே காணப்பட்டன. இதுபோல்

நாகர்கோவிலில் நேற்று காலையில் வழக்கம்போல் வெயில் இருந்தது. பிற்பகலில் நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டாரப்பகுதியில் வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. சுமார் 2.45 மணி அளவில் திடீரென சாரல் மழை பெய்யத்தொடங்கியது. இந்த மழை நேற்று முன்தினம் பெய்த மழையைப்போல் பலமாக பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சுமார் 10 நிமிடம் வரை மட்டுமே பெய்த சாரல் பின்னர் ஓய்ந்தது. எனவே நேற்றும் குமரி மாவட்டத்தில் சில இடங்களில் சாரல் மழை தொடர்ந்தது. நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம்(மி.மீட்டர்)வருமாறு:– 92 மி.மீ. மழை பேச்சிப்பாறை– 4, பெருஞ்சாணி– 10.2, முக்கடல்– 92, இரணியல்–1, ஆணைக்கிடங்கு– 11, முள்ளங்கினாவிளை– 4, நாகர்கோவில்–34.4, பூதப்பாண்டி– 55.5, சுருளோடு– 52, கன்னிமார்– 61, ஆரல்வாய்மொழி– 18.6, பாலமோர்– 2.8, மயிலாடி– 17.6 என்ற அளவில் பெய்திருந்தது. இதில் அதிகபட்சமாக முக்கடல் பகுதியில் 92 மி.மீ. அளவு மழை பதிவாகியிருந்தது. நாகர்கோவில் பகுதிக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணை நேற்று முன்தினம் 24.15 அடியாக இருந்தது. அது நேற்று 25½ அடியாக உயர்ந்தது. 2010–ம் ஆண்டு வரை 25 அடி கொள்ளளவு கொண்டதாக முக்கடல் அணை இருந்தது. அந்த ஆண்டில் அணையின் ஷட்டர் பழுதடைந்ததின் காரணமாக சீரமைப்பு பணி நடந்தபோது ஒரு அடிக்கு சுவர் எழுப்பப்பட்டது. இதனால் தற்போது இந்த அணை 26 அடி கொள்ளளவு கொண்டதாக அமைந்துள்ளது என்றும், எனவே 26 அடிக்குப்பிறகுதான் உபரி நீர் மறுகால் வழியாக வெளியேறும் என்றும் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சுரேஷ்குமார் தெரிவித்தார். <u>4ஆண்டுகளுக்குப்பிறகு...</u> முக்கடல் அணை கடந்த 2009–ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில்தான் முழு கொள்ளளவான 25 அடி கொள்ளளவை எட்டியிருந்தது. 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதுதான் இந்த அணை முழு

கொள்ளளவை எட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ராமநாதபுரத்தில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி

ராமநாதபுரம் மாவட் டம் முழுவதும்நேற்று முன்தினம் நல்லமழை பெய்தது. இதனால் விவசாயிகள், பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பலத்த மழை

ராமநாதபுரம் மாவட்டத் தில் ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழையும், வைகை தண்ணீரும் தான் விவசாயிகளுக்கும், பொது மக் களுக்கு தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து வந்துள்ளது. ஆனால் மக்களின் நம்பிக்கை நீர் ஆதாரங்களான இவை இரண்டும் ஆண்டுக்காண்டு பொய்த்துக்கொண்டே வரு வதும், அடுத்தடுத்த ஆண்டு களில் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருப்பதும் இந்த மாவட்ட மக்களுக்கு வாடிக்கையாகி விட்டது. இதற்கேற்றாற்போல 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை பலத்த மழை பெய்வதும், பெருக்கெடுத்து வரும் வெள்ள நீர் மக்களுக்கும், மண்ணிற்கும் பயனில்லாமல் வீணாக கடலில் கலந்து விடுகிறது. அடுத்த 3 ஆண்டுகள் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் குடிநீருக்கும் மக்கள் திண்டாடுவார்கள். கடந்த 2 ஆண்டு களில் பருவமழை பொய்த்து இந்த மாவட்ட மக்கள் வானத் தால் வஞ்சிக்கப்பட்ட நிலை யில் இந்த ஆண்டாவது நல்ல மழை பெய்யுமா? என்று காத் திருக்கின்றனர். இதற்கு ஏற் றாற்போல மக்களின் நம்பிக் கைக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் மாவட்டத்தில் வட கிழக்கு பருவமழை பெய்ய தொடங்குவதற்கு முன்னரே அதற்கான அறிகுறி தெரியத் தொடங்கி உள்ளது.

மழையளவு

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக மற்ற மாவட்டங் களில் பரவலாக மழை பெய்து வந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் மழை கொஞ்சம் கூட பெய்யாமல் இருந்து வந்தது. இந்த நிலை யில் நேற்று முன்தினம் மழை மேகம் திரண்டு வானம் மப் பும் மந்தாரமாக இருந்து வந் தது. மதியம் 2 மணி முதல் பலத்த மழை கொட்டி தீர்த் தது. இதன் காரணமாக கடந்த 2

ஆண்டுகளாக மழை இல் லாமல் வறண்டு கிடந்த பகு திகள் எல்லாம் இந்த மழை யால் தண்ணீர் சேர்ந்து ஈரப் பதமாக மாறியது. மாவட்டத்தில் காணப் பட்டு வந்த கடும் வெப்பநிலை மாறி குளிர்ச்சி நிலவியது. மழையால் பொதுமக்கள், மகிழ்ச்சி அடைந்தனர். மாவட் டம் முழுவதும் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பதிவான மழையளவு விவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு:- கமுதி 3.80, பரமக்குடி 10.40, ராம நாதபுரம் 23.20, திருவா டானை13, தொண்டி 2.80, தீர்த் தாண்டதானம்13, ஆர்.எஸ்.மங்கலம்27, கடலாடி14.20. சராசரி மழை அளவு 6.71

**<u>ஜலகண்டாபுரம் பகுதியில் பலத்த மழை</u>**

ஜலகண்டாபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான ஆவடத்தூர், தோரமங்கலம், சூரப்பள்ளி, கரிக்காபட்டி, நரியம்பட்டி, சவுரியூர், குப்பம்பட்டி, செலவடை, வங்காளியூர் ஆகிய பகுதிகளில் நேற்று மாலை 3 மணிக்கு தொடங்கி 4½ மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இந்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**<u>பாபநாசம் அணை திறப்பு 35 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும்</u>**

பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணை திறக்கப்பட்டது. இதன் மூலம் 35 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

பிசான சாகுபடி

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 11 கால்வாய்கள் மூலம் பாசன வசதி பெறும் விவசாயிகளின் கோரிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு உத்தரவுப்படி நேற்று பாபநாசம் அணை திறக்கப்பட்டது. ஏற்கனவே கடந்த ஜூலை மாதம் 4–ந்தேதி முதல் தெற்கு கோடை மேலஅழகியான், வடக்கு கோடை மேலஅழகியான், கன்னடியன், நதிஉண்ணி கால்வாய்களின் மூலம் 18 ஆயிரத்து 90 ஏக்கர் நிலங்களுக்கு, பாபநாசம்

அணை திறக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அப்போது மீதமுள்ள 7 கால்வாய்களுக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை. இதனால் முன்குறுவை சாகுபடி பாதிப்படைந்தது. இந்நிலையில் பிசான சாகுபடிக்காக பாபநாசம் அணை திறக்கப்பட்டது. நெல்லை மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன் தலைமை, தாங்கி பாபநாசம் அணையை திறந்து வைத்து பேசினார். அவர் கூறியதாவது:–

நெல்லை மாவட்டத்தில் பிசான சாகுபடிக்காக பாபநாசம் அணையில் இருந்து இன்று (அதாவது நேற்று) முதல் அடுத்த வருடம் மார்ச் மாதம் 31–ந் தேதி வரை 173 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 67.85 அடியாக உள்ளது. அணையின் நீர்வரத்து 254 கனஅடியாக உள்ளது. அணையில் இருந்து பிசான சாகுபடிக்காக 1,100 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் நெல்லை மாவட்டத்தில் உள்ள கோடகன் கால்வாய், பாளையங்கால்வாய், திருநெல்வேலி கால்வாய் ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள நேரடி மற்றும் மறைமுக பாசன பரப்பான 21 ஆயிரத்து 910 ஏக்கர் நிலங்களும், நெல்லை மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால்வாய், மருதூர் கீழக்கால்வாய், வடக்கு மற்றும் தெற்கு பிரதான கால்வாய் ஆகிய கால்வாய்களின் உள்ள நேரடி மற்றும் மறைமுக பாசன பரப்புகளான 13 ஆயிரத்து 506 ஏக்கர் நிலங்களும், ஆக மொத்தம் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 35,416 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் நேரடி மற்றும் மறைமுக பாசன வசதி பெறும். அணையின் நீர் இருப்பை பொறுத்து விவசாயிகளின் தேவைக்கேற்ப சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விடப்படும். பிசான பருவ சாகுபடிக்காக திறந்து விடும் தண்ணீரினை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு கலெக்டர் கருணாகரன் பேசினார்.

அதிகாரிகள்

தாமிரபரணி வடிநீர் கோட்ட செயற்பொறியாளர் ஏ.எம்.சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் நட்டார், உதவி பொறியாளர் மாயமுருகன், விக்கிரமசிங்கபுரம் நகரசபை தலைவி மனோன்மணி, அம்பை தாசில்தார் சேதுராமலிங்கம், தாமிரபரணி திட்ட குழு தலைவர் உதயசூரியன், மருதூர் கீழ கால்வாய் தலைவர் சீனிபாண்டி, ஸ்ரீவைகுண்டம் தெற்கு பிரதான கால்வாய் தலைவர் ராஜபாண்டி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.